(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவந்த அழிவுகளிலிருந்து மீளும் முயற்சிகள் மறுபுறமும் ஒரேகதியில் இயங்கும் இந்நேரத்தில் இச்செயலகம் மேற்கொள்ளும் ஒவ்வொரு புதிய முயற்சியும் சூழல் தொடர்பான கேள்விகளையும் உள்ளடக்கியதாக விருப்பதும் நடைமுறைக்குகந்தது.

சூழல் நல்லாட்சி ஆணையம் என்பது தன்னுடைய பணிகளைச் செவ்வனே செய்வதற்கு ஒரு அதிகார வலுக்கொண்ட முகாமைத்துவ சபையையும் தனக்கான துறைசார் அறிவுரைகளை, ஆலோசனைகளை வழங்கவல்ல மதியுரைஞர் அவையையும் கொண்டிருக்கும்.

இவ்வாணையத்தின் பணிகள் மூன்று வகையானவை. இவற்றினை நிறைவேற்ற வென மூன்று சிறப்பான பிரிவுகளை இவ்வாணையம் கொண்டிருக்கும். சூழல் தரவுப் பிரிவென்பது தமிழர் தாயகத்தின் இயற்கை வளம், தாவரங்கள், உயிரினங்கள் உள்ளடங்கலான சூழலியல் தொடர்பான தரவுத்தளம் ஒன்றினை உருவாக்கும் பணியை மேற்கொள்ளும். இது ஆணையத்தின் அறிவுத்தளமாக அமையும். இரண்டாவது பிரிவான சூழல் ஒழுங்குவிதியியற்றல் பிரிவென்பது சூழல் பேணப்படுவதற்கான நியமங்களையும் விதிகளையும் உருவாக்குவதோடு அவ்விதிகட்கு ஏற்றவகையில் மக்களையும், நிறுவனங்களையும் ஒழுங்கமைக்கும் பணியினை மேற்கொள்ளும். சூழல் பற்றிய விதிகட்கமைய சமூகத்தின் நன்னடத்தையை உறுதிசெய்யும் இப்பிரிவு தனது பங்காளர்களாக வெவ்வேறு துறைசார்ந்த நிறுவனங்கள், அலகுகளோடு இணைந்து செயற்படவேண்டிய நியதியுண்டு. மூன்றாவது பிரிவாகிய சூழல் மேம்பாட்டுப் பிரிவென்பதே சூழல் நல்லாட்சியினை உறுதிப்படுத்தும் வகையில் களநிலைப் பணிகள் எல்லாவற்றையும் முன்னெடுக்கும் பொறுப்பினைக் கொண்டிருக்கும். மக்களிடையே விழிப்புணர்வுக்கும் பொறுப்பான அறிவுசார்ந்த நடத்தைக்குமான செயற்றிட்டங்களை இப்பிரிவு மேற்கொள்ளும்.

உலக அரங்கிலே புதியவையாகக் கொள்ளப்படும் பல்வேறு சிந்தனைகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ள இவ்வாணையம் எம் தாய்மண்ணின் இயற்கையையும் மக்கள் வாழும் சூழலையும் மேன்மையான நிலையில் பேணவும் எமது சமூகத்தின் இன்றைய, இனிவரப்போகும் சந்ததியினருக்கு நல வாழ்வினை உறுதிப்படுத்தவும் வேண்டுமாயின் தகைமை வாய்ந்த மக்களையும் சூழல்பற்றிய தெளிவுபெற்ற சமூகத்தையும் வளர்த்தெடுக்கும் அதேநேரத்தில் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய விதிகளையமைத்து மக்களனைவரினதும் பங்கேற்போடு அவற்றை அதிகாரபூர்வமாகக் கடைப்பிடித்தால் நிறைவான சூழல் நல்லாட்சி கைகூடுமென்பதில் ஐயமெதுவுமில்லை. இயற்கையை இறைவனாகக் கண்டு வந்த தமிழினம் மீளவும் தமது சுதந்திர தேசத்தில் இயற்கைக்கு உரிய மதிப்பிடம் கொடுத்து வாழத் தயங்காதென்பது எம் எல்லோரதும் திடமான நம்பிக்கை. எமது இருப்பு எமது இயற்கையில் தங்கியுள்ளதென்ற உண்மையை மறவாது வாழ்வோமாக. ●